# உதயன்

விலை ரூபா 6-00

சுடர் 11 வள்ளுவர் ஆண்டு 2027 ஆவணி 09 ஞாயிற்றுக்கிழமை (25-08-1996) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 190


## இறைவரித் திணைக்கள கட்டடத்தில் குண்டுப் புரளி

### ஊழியர் அகற்றப்பட்டு சோதனை

கொழும்பு, ஒக. 25

கொழும்பு சிற்றம்பலம் கார்டினர் மாவத்தையில் அமைந்துள்ள உள்நாட்டு இறைவரித் திணைக்களக் கட்டடத்தில் குண்டு வைக்கப் பட்டுள்ளதாக வந்த அநாமதேய தொலைபேசி அழைப்பு ஒன்றை அடுத்து அங்குபெரும் பதற்ற நிலை உருவாகியது.

கடந்த வியாழக்கிழமை இச் சம்பவம் இடம்பெற்றது.

இதனை அடுத்து விமானப் படையினர், தரைப்படையினர், பொலீஸார் கூட்டாக கட்டடத்தைச் சூழ்ந்து கொண்டு தீவிர தேடுதல் நடத்தினர்.

கட்டடத்தில் இருந்து அனைத்து ஊழியர்களும் அவசரம், அவசரமாக வெளியேற்றப்பட்டனர். பார்சல்கள், பொதிகள் மற்றும் மூலை முடுக்குகள் எல்லாம் சல்லடை போட்டுத் தேடப்பட்டன.

படையினர் மேற்கொண்ட தீவிர தேடுதல்களையடுத்து அது வெறும் புரளி எனத் தெரியவந்ததாம். (இ-3)

## விடுதலைப் புலிகளை தடை செய்வது குறித்து அமைச்சரவை ஆராய்வு

### தீர்க்கமான முடிவின்றிக் கலைந்தது

கொழும்பு, ஒக. 25

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தை தடை செய்வது குறித்து, கடந்த வியாழக் கிழமை நடைபெற்ற அமைச் சரவைக் கூட்டத்தில் நீண்ட நேரம் விவாதிக்கப்பட்டதாகத் தெரியவந்துள்ளது.

அமைச்சரவையின் அன்றைய அவசரக் கூட்டத்தில் புலிகளைத் தடைசெய்வதற்குச் சார்பாகவும் எதிராகவும் அமைச்சர்கள் கன்னை பிரிந்து கருத்துத் தெரிவித்தார்கள் என்றும்

ஆயினும் அது குறித்துத் தீர்க்கமான முடிவு எதுவும் எடுக்கப்படவில்லை என்றும்— மேலும் தெரியவந்துள்ளது.

விடுதலைப் புலிகள் இயக்கத்தைத் தடை செய்வதா இல்லையா என்று முடிவு செய்து, அந்த முடிவு எதுவாக இருப்பினும் அதனை அறிவிக்க வேண்டிய காலம் வந்துவிட்டது என அமைச்சர்கள் பலரும் தெரிவித்தனர்.

இந்த அவசர அமைச்சரவைக் கூட்டத்துக்கு ஜனாதிபதி சந்திரிகா தலைமை வகித்தார்.

ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் 51 ஆவது ஆண்டைக் கொண்டாடுவது குறித்தும் பாணின் விலையை மேலும் உயர்த்தலாமா என்பது குறித்து அமைச்சரவைக் கூட்டத்தில் ஆராயப்பட்டதாம்.

# ராணுவ பயிலுநர் படைக்கு வட. - கிழக்கில் ஆள்திரட்டல்

## அ.தி.மு.க. வில் இருந்து வெளியேறினார்

சென்னை, ஒக. 25

அ. தி. மு. க. வின் துணை பொதுச் செயலர்களில் ஒருவரும் முன்னாள் அமைச்சருமான திரு. கே. ஏ. கிருஷ்ண சுவாமி அக்கட்சியின் அடிப்படை உறுப்பினர் பதவி உட்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## அரச அதிபர்களின் ஒத்துழைப்பை கோருகிறது ராணுவத் தலைமையகம்

கொழும்பு, ஓகஸ்ட் 25

**வடக்கு – கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த இளைஞர்கள், இராணுவப் பயிலுநர் படைக்குச் சேர்த்துக் கொள்ளப்படவிருக்கின்றார்கள்.**

**இந்த விடயத்தில் அரச அதிபர்களின் ஒத்துழைப்பை இராணுவத் தலைமையகம் கோரியிருக்கின்றது.**

இராணுவப் பயிலுநர் படைக்கு வடக்கு — கிழக்கு இளைஞர்களைத் திரட்டுவது தொடர்பான நடவடிக்கைகளை இராணுவத் தலைமையகம் ஆரம்பித்திருப்பதாகத் தெரியவருகின்றது.

இந்த ஆள்திரட்டலுக்கு ஒத்துழைப்புத் தருமாறு இராணுவத் தலைமையகத்திலிருந்து மாவட்ட அரசாங்க அதிபர்களுக்கு கோரிக்கை விடுக்கப்பட்டிருக்கின்றது.

ஒவ்வொரு கிராம சேவையாளர் பிரிவில் இருந்தும் 10 இளைஞர்கள் என்ற வீதத்தில் இராணுவப் பயிலுநர் படைக்கென ஆட்களைத் திரட்டித் தருமாறு இராணுவத் தலைமையகம் நேரடியாகக் கேட்டுள்ளது.

இக்கடமையைச் செய்வதற்

(6 ஆம் பக்கம் பார்க்க)

### குடாநாட்டின் சில பகுதிகளில்

## துப்பாக்கி சூட்டு சம்பவங்கள் ஒருவர் பலி, மூவர் காயம்

யாழ்ப்பாணம், ஒக. 25

குடாநாட்டின் வெவ்வேறு பகுதிகளில் கடந்த இரு தினங்களில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களில் ஒருவர் உயிரிழந்தார். மூவர் காயம் அடைந்தனர்.

மல்லாகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் மருதனார் மடத்தில் வசிக்கும் சண்முகராசா சசிகரன்(வயது 21) என்பவர் மரணமானார்.

தெல்லிப்பளையில் உள்ள தமது வீட்டைப் பார்க்கச் சென்று திரும்பிய போது இந்தச் சம்பவம் இடம்பெற்றது. சடலம் யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டது.

அதே தினம் சாவகச்சேரிப் பகுதியில் இடம்பெற்ற துப்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## மணலாறில் மோதல்

கொழும்பு ஒக. 25

மணலாறில் கொக்குத் தொடுவாய்க்கு வடக்கே படையினர் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையின் போது இடம்பெற்ற மோதலில் மூன்று படையினர் காயமடைந்தனர் என்றும் —

காயமடைந்தவர்கள் அனுராதபுரம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்றும் — இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் தெரிவித்தது.

அங்கு இடம்பெற்ற மோதலில் மூன்று விடுதலைப் புலிகள் கொல்லப்பட்டனர் என்றும்— இருவரின் சடலங்களையும் ஆயுதங்களையும் படையினர் கைப்பற்றினர் என்றும் — மேலும் தெரிவிக்கப்பட்டது. (இ-4)

## ஈழ அகதிகளின் வருகை குறித்த இந்தியாவின் விசனம் நேரில் தெரிவிப்பு

### வெளியுறவு அமைச்சுச் செயலர் கொழும்பு வந்தார்

கொழும்பு, ஒக. 25

இலங்கையில் இருந்து தமிழகத்துக்கு மீண்டும் தமிழர்கள் அகதிகளாகச் செல்ல ஆரம்பித்திருப்பது குறித்து இந்திய மத்திய அரசாங்கம் கொண்டிருக்கும் விசனம் இலங்கை அரசாங்கத்துக்கு நேரில் தெரியப்படுத்தப்பட்டிருக்கிறது.

கொழும்புக்கு விஜயம் மேற்கொண்டிருக்கும் இந்திய வெளியுறவு அமைச்சின் இணைச் செயலாளரான ரஞ்சன் மத்தாய், இலங்கை வெளியுறவுச் செயலாளர் ஆர். சி ஏ வாண்டர்கட் உட்பட சிரேஷ்ட அதிகாரிகளைச் சந்தித்தார்.

வெளிநாட்டு அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரையும் மத்தாய் மரியாதை நிமித்தம் சந்தித்துப் பேசினார்.

(6 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளை அனுருத்த சந்தித்த போது.....

கொழும்பு, ஒக. 25

"விடுதலைப் புலிகளுடன் ஐ. தே. க. பேச்சு நடத்தியது பற்றிய விவரங்களை ஶ்ரீலங்கா அரசு தம்பட்டம் அடித்துப் பிரசாரப்படுத்தி வருகையில் —

1988 ஜனாதிபதித் தேர்தலின் போது சிறீமாவோ பண்டாரநாயக்காவுக்கு ஆதரவு கோரி வவுனியா காடுகளிடையே விடுதலைப் புலிகளை ஶ்ரீ. ல. சு. க. பிரதிநிதிகள் குழு சந்தித்த போது எடுக்கப்பட்ட படம் ஒன்று கிடைத்துள்ளது" — என்ற குறிப்புடன் ஒருவர்ணப் படத்தை "த சண்டே லீடர்" ஆங்கில வார இதழ் தனது முதலாவது பக்கத்தில் பிரசுரித்துள்ளது. "தமிழீழ விடுதலைப் புலிகளை அனுருத்த சந்தித்த

(6 ஆம் பக்கம் பார்க்க)

### மாமன்-மருமகன் மோதல் முற்றுகிறது:

# ரத்வத்தை மீது அனுரா வழக்குத் தொடருவார்!

கொழும்பு, ஒக. 25

"நான் திருமதிசிறிமாவோ பண்டாரநாயக்காவின் மகன் அல்லன் என்று ஜெனரல் அனுருத்த ரத்வத்தை ஒரு பொதுக் கூட்டத்தில்கூறியிருக்கின்றார். அதற்காக அவர் மீது விரைவில் நீதிமன்றத்தில் வழக்குத் தொடரவிருக்கிறேன்."

இவ்வாறு அறிவித்திருக்கின்றார் ஐ. தே. கட்சி எம்.பியான அனுரா பண்டாரநாயக்கா.

அனுரா பண்டார நாயக்காவின் மாமனார் முறையானவர் அனுருத்த ரத்வத்தை

(6 ஆம் பக்கம் பார்க்க)

# ZION CHURCH
## AN INAUGURAL SERVICE
In the Renovated Church with all Branches
**Sunday 1st September 1996 at 10.00 a. m**
All are Welcome

## சீயோன் தேவாலயம்
புனரமைக்கப்பட்ட ஆலயத்தில் அனைத்து கிளைகளும் இணைந்த
**ஆரம்ப ஆராதனை**
01–09–1996 ஞாயிறு காலை 10- 00 மணி
24, இராமையா செட்டியார் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.
24, Ramiah Chettiar Lane,
Jaffna.
(42389)



# பதவி வெற்றிடங்கள்
யாழ் நகரில் ஆரம்பிக்கப்படவிருக்கும் மொத்த வியாபார நிறுவனமொன்றுக்கு பின்வரும் பதவி வெற்றிடங்களுக்கு உத்தியோகத்தர்கள் தேவை.

1. முகாமையாளர் I:
யாழ். நகரில் மொத்த வியாபார நிறுவனத்தில் (உணவுப் பொருள்கள்) கடமையாற்றி அனுபவம் பெற்றவர்கள்.
2. முகாமையாளர் II:
விவசாய, இரசாயனப் பொருள்கள் விற்பனையில் அனுபவம் பெற்றவர்கள்.
3. கணக்காளர்:
அனுபவமும் ஆற்றலுமுடையவர்கள் விரும்பத்தக்கது.
4. ஆங்கில தட்டெழுத்தாளர்/ லிகிதர்:
தராதரமும் முன் அனுபவமும் உடையவர்கள்.
5. பாதுகாப்பு உத்தியோகத்தர்கள்:
அனுபவமும் நல்லொழுக்கமும் தராதரமும் உடையவர்கள்.

★ 27- 08- 96 செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை கீழ்க்காணும் முகவரியில் நடைபெறும் நேர்முகப் பரீட்சைக்கு, தகுந்த ஆவணங்களுடன் நேரில் சமுகமளிக்கவும்.

**M. L. ஸ்ரீகாந்தா**
இல. 99/7, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
(42404)


## நீங்கா நினைவில்
## 180ஆம் நாள் நினைவஞ்சலி



பிறப்பு: 25 — 09 — 1947
இறப்பு: 25 — 02 — 1996

அமரர்
### சூசைப்பிள்ளை அல்பிறெட்
(இலங்கை வங்கி உதவி முகாமையாளர்
யாழ். மேற்தரகிளை)

இக்கணமும் உம் இழப்பை உண்மையெனக் கொள்
வோமா
இங்கு உன்னவர்கள் வாழ்ந்திட
நினைவில் அழியா முத்திரைகள் ஆறிலையும்
பெற்று
மருதமடு அன்னையின் சந்நிதியில் மீளாத்துயிலில்
துயில்கின்ற அப்பாவே!
மிருசுவிலில் உமக்கு கல்லறை அமைத்து
கண்ணீர்ப் பூக்கள் உதிர்த்து உம் நினைவில் வாடி
நிற்கிறோம்.

— குடும்பத்தினர்

இல: 80 ஈச்சமோட்டை வீதி,
யாழ்ப்பாணம். (42402)

## திருமலையில் பத்திரகாளிக்கு இராஜகோபுரம்

திருகோணமலை, ஓக. 25
சரித்திரப்புகழ் வாய்ந்த திருகோணமலை ஸ்ரீபத்திரகாளி அம்பாள் ஆலயத்துக்கு மகா இராஜகோபுரம் ஒன்றைக் கட்டும் திருப்பணி கடந்த திங்கட்கிழமை 19ஆம் திகதி காலை வேதபாராயணம் முழங்க பக்தர்களின் அரோஹரா கோஷங்களின் மத்தியில் பக்திபூர்வமாக ஆரம்பித்துவைக்கப்பட்டது.

சுமார் ஒரு கோடி ரூபா செலவில் இராஜகோபுரம் கட்டப்படவிருக்கிறது. இதன் உயரம் 68 அடியாக இருக்கும் என்று தெரிவிக்கப்பட்டது.

இத்திருப்பணிக்கான அத்திவாரக்கல்லை வெள்ளவத்தை ராமகிருஷ்ண மிஷன் தலைவர் சுவாமி ஆத்மகனாநந்தஜி நட்டு வைத்தார். அதனைத் தொடர்ந்து முன்னாள் அமைச்சர் பி. பி. தேவராஜ் கோணேசராலய பரிபாலன சபைத் தலைவர் எம். கே. செல்வராசா ஆகியோருட்படப் பலர் கற்களை நட்டனர்.

பிரம்மஸ்ரீ சாமி விஸ்வநாதக் குருக்கள் தலைமையில் இதற்கான கிரியைகள் இடம்பெற்றன. ஏராளமான சிங்களப்பக்தர்களும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.
(அ-150)

## நீர்வேலியில் மிதிவெடி

யாழ்ப்பாணம், ஓக. 25
வாழைச்சருகு வெட்டச் சென்றவர் வாழைத் தோட்டத்துக்குள் இருந்த மிதிவெடியில் சிக்குண்டு இடது காலை முழங்காலுக்குக் கீழ் இழந்தார்.

நீர்வேலிப் பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இச்சம்பவத்தில் அவ்விடத்தைச் சேர்ந்த ந. இரட்ணேஸ்வரன் (வயது 32) என்பவரே கால் துண்டிக்கப்பட்டவராவார்.

காயமடைந்தவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (இ-15)

## விண்ணப்பப் படிவம்

கனிஷ்ட தொழில் நுட்பத் தராதரப் பத்திரப் பரீட்சைக்கான விண்ணப்பப்படிவங்கள் கோட்டக் கல்வித் திணைக்களத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இவற்றைப்பெற்று பூரணப்படுத்தி இம்மாதம் 30ஆம் திகதிக்கு முன் கோட்டக்கல்வி அலுவலகங்களில் ஒப்படைக்குமாறு பாடசாலை அதிபர்கள் கேட்கப்பட்டுள்ளனர்.
(இ-3)

## தெல்லிப்பளை கல்விக்கோட்ட அலுவலகம்

இதுவரை காலமும் மானிப்பாய் இந்துக் கல்லூரியில் இயங்கி வந்த தெல்லிப்பளை கல்விக்கோட்ட அலுவலகம் இம் மாதம் 19 ஆம் திகதியில் இருந்து மருதனார் மடம்— மானிப்பாய் வீதியில் உடுவில் மகளிர் கல்லூரிக்கு அருகில் உள்ள தனியார் வீடொன்றில் இயங்கிவருகிறது.
(இ-152)


# A/L 98
PURE/APP.
Mr. கருணா
CHEMISTRY
Mr. மகேஸ்வரன்
PHYSICS
Mr. ஸ்பெல்மன்
**SHAMROCK**
ஈச்சமோட்டை வீதி,
யாழ்ப்பாணம்.
(மறவகுளம் அருகில்)
(42409)



# யாழிசை
எமது ஸ்தாபனம் மீண்டும் அதே இடத்தில் —
114, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணத்தில் —
21 - 08 - 96 தொடக்கம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்பதை வாடிக்கையாளர்கள், நண்பர்களுக்கு மகிழ்ச்சியோடு அறியத்தருகின்றோம்.
★ கைக்கடிகாரம், சுவர், மேசை மணிக்கூடுகள்
★ கமரா, ரேடியோ
★ அழகு சாதன அன்பளிப்புப் பொருள்கள்
தரமாகவும் மலிவாகவும் பெற்றுக்கொள்ள
யாழிசை
114, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(42408)



# ஆண்டு - 5 புலமைப்பரிசில் '96
பல பெற்றோர்களின் வேண்டுகோளுக்கிணங்க
இலவச — மீட்டற் பயிற்சி வகுப்புகள்
வகுப்புகளுக்கு சமுகமளிக்கும் மாணவர்களுக்கு மட்டும்
இலவச —பயிற்சி வினாத்தாள்கள் (விடைகளுடன்)
26 — 08 — 96 திங்கள் தொடக்கம் 06 — 09 — 96 வெள்ளி வரை தினமும் பி. ப. 3. 15 — 4. 45 வரை
(பழைய நேரம்)
பரீட்சைப்பகுதி – **BOND INSTITUTES**
58A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(42401)


# மரண அறிவித்தல்கள்

## செல்வி செல்வரத்தினம் ரஜனி

இல 50, 5ம் ஒழுங்கை, அரசடி வீதி, நல்லூர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த செல்வி செல்வரத்தினம் ரஜனி (யாழ் இந்து மகளிர் கல்லூரி A/L 1995 வர்த்தகப்பிரிவு மாணவி) 21- 08- 1996 இல் கொழும்பில் காலமாகி விட்டார்.

இவர் செல்வரத்தினம் மங்கையர்க்கரசி[ கமலா] ஆகியோரின் அன்பு மகளும், ரஜனிகாந்த், ரஜனிதரன் (யாழ். மத்திய கல்லூரி) தர்சினி ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக கொழும்பு கனத்தை மயானத்திற்கு இன்று ஞாயிறு 25- 08- 1996 பிற்பகல் 4. 00 மணிக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்:
குடும்பத்தினர்.
இராசு செல்வரத்தினம்
(சித்தப்பா – மணியம்)
(அம்பாள் மரக்காலை, நல்லூர்)
கந்தையா நயினார்.

இல: 50, 5ஆம் ஒழுங்கை,
அரசடி வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம். (42403)

## கந்தையா நல்லதம்பி

மாவிட்டபுரம் மடத்தடியைச் சேர்ந்த கந்தையா நல்லதம்பி 23 - 08 - 96 வெள்ளிக்கிழமை காலமாகி விட்டார்.

இவர் சுளிபுரம் ஆறுமுகத்தின் மகள் இரத்தினேஸ்வரியின் அன்புக் கணவரும், காலஞ் சென்ற பகவதி, மகேஸ்வரி, சின்னத்தங்கச்சி, முருகேசு, சொக்கலிங்கம், பேரம்பலம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், பத்மாவதி, பத்மராணி, தர்மராசா (சுவிஸ்), தர்மபாலன் (கனடா), வதனி, லதா ஆகியோரின் அன்புத் தந்தையும், பாலசுப்பிரமணியத்தின் (சம்பந்தர் வைத்திய நிலைய முகாமையாளர்) அன்பு மாமனாரும், பிரசாந், கோபிகா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 24 - 08 - 96 சனிக்கிழமை பி. ப. 2.00 மணிக்கு நுணாவில் மேற்கில் இருக்கும் பொன்னுத்துரை வீட்டில் நடைபெற்றன.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
சு. பாலன்
(மருமகன்)
(42407)

## சூசைப்பிள்ளை யேசுதாசன்

கோண்டாவில் வடக்கைச் சேர்ந்த சூசைப்பிள்ளை யேசுதாசன் (ஜெயராஜா — ஓய்வுபெற்ற மின்சார சபை உத்தியோகத்தர்) 19 - 8 - 96 இல் மட்டக்களப்பில் காலமானார்.

இவர் காலஞ்சென்ற சூசைப்பிள்ளை — றோஸ் தம்பதிகளின் புத்திரனும், சரசின் அன்புக் கணவரும், இளையப்பாவின் மருமகனும், நிமல், ஸ்ரெலா, கில்டா, ஜோர்ஜ், ஏபிரகாம், மெற்றில்டா ஆகியோரின் அன்புத் தந்தையும், ரவீந்திரன், மொறிஸ், மனோ, சியாமளா, கலைவாணி, கிறிஸ்தோப்பர் ஆகியோரின் மாமனாரும், ஜேமணி, றுக்மணி, ராதாமணி ஆகியோரின் சகோதரனுமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை 24 - 8 - 96இல் நடைபெற்றன.

தகவல்:
திருமதி ராதா சூசைப்பிள்ளை

இல. 17, 4 ஆம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம். (42398)

### பயிர்கள் அழிந்ததால் பெரும் பட்டினி அபாயம்:

# அமெரிக்க உணவுக்கப்பல் வட கொரியதுறைமுகத்தில்

## 45 வருட காலத்தில் முதலாவது சம்பவம்

பியோங்யாங், ஓக. 25

பெரும் பஞ்சத்தை எதிர் நோக்கி இருக்கும் வடகொரியாவுக்கு அமெரிக்கா, அவசர உணவு உதவிகளை வழங்கி உள்ளது.

அமெரிக்க சரக்குக் கப்பல் ஒன்று 13 ஆயிரம் தொன் அரிசி மற்றும் கோதுமைத் தானியத்துடன் வடகொரிய துறைமுகம் ஒன்றை வந்து அடைந்துள்ளது.

கடந்த 45 வருட காலத்தில் அமெரிக்க கப்பல் ஒன்று வடகொரியத் துறைமுகத்துச்கு வந்தது இதுவே முதல் தடவை ஆகும்.

1950 — 53 கொரிய யுத்தம் காரணமாக அமெரிக்காவுக்கும் வடகொரியாவுக்கும் இடையிலான உறவுகள் அடிமட்டத்துக்குத் தள்ளப்பட்டிருந்தன.

கடந்த இரண்டு ஆண்டுகளாகவே இந்த உறவில் சிறிய அபிவிருத்தி நிலை காணப்படுகிறது.

ஐ. நா. உலக உணவுத்திட்டத்தின் கீழேயே வடகொரியாவுக்கு அமெரிக்கா தற்பொழுது உணவுப் பொருள்களை அனுப்பி இருக்கிறது.

கடந்த கோடை காலத்தில் வடகொரியாவில் ஏற்பட்ட பெரும் வெள்ளம் காரணமாக வயல் நிலங்கள் பெரும்பாலும் முற்றாகவே அழிந்து விட்டன.

பஞ்சம் ஏற்பட்டு பட்டினிச் சாவு அபாயம் ஏற்பட்ட சமயம் வடகொரியா ஐ. நா. விடம் அவசர உதவி கோரி இருந்தது.

இதனை ஏற்றேஅமெரிக்கா உணவுக் கப்பலை அனுப்பி வைத்தது.

தென்கொரியாவும் ஒரு சிறிய தொகையை வடகொரியாவுக்கு வழங்க இணங்கி உள்ளது.

எனினும் வடகொரியாவின் தேவையை இந்த உதவிகள் முழு அளவில் பூர்த்தி செய்யப் போதுமானதாக இல்லை என்று ஐ. நா. உலக உணவுத் திட்டம் அறிவித்துள்ளது.

[இ]

## அன்னை திரேசா சுகவீனம்

கல்கத்தா, ஓக. 25

அன்னை திரேசாவின் உடல்நிலை மோசமடைந்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அன்னை திரேசாவின் இரத்தத்தைப் பரீட்சித்த டாக்டர்கள் இரத்தத்தில் மலேரியா நோய்க்கான அறிகுறிகள் தென்படுவதாகத் தெரிவித்துள்ளனர்.

அன்னை திரேசா உடல்நிலை காரணமாக இவ்வாரம் கல்கத்தா ''வுட்லண்டஸ்'' மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

(இ-10)

## காஷ்மீரில் கடும் குளிர்; 64 யாத்திரிகர்கள் மரணம்

காஷ்மீரில் கடுமையான குளிர் மற்றும் பெருமழை காரணமாக உயிரிழந்த அமர்நாத் யாத்திரிகர்களின் எண்ணிக்கை 64 ஆக உயர்ந்துள்ளது.

அமர்நாத் குகைக்கோயிலை சென்றடையும் 48 கிலோ மீற்றர் பாதையில் தங்கியுள்ள யாத்திரிகர்களை மீட்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

காஷ்மீரில் இருந்து சுமார் 20 ஆயிரம் பேர் வரை சட்டிமுபராத் புனித தண்டத்துடன் அமர்நாத்துக்கு யாத்திரை புறப்பட்டிருந்தனர்.

இவர்கள் தற்போது பலத்த மழை மற்றும் மண்சரிவினால் வழியில் உள்ள சதம்பூரில் தங்கியுள்ளனர்என்றும்-

தொடரும் மழை, பனி காரணமாக பல ஆயிரம் யாத்திரிகர்கள் மயக்கமடைந்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (இ - 3)

## கிளின்ரன் - டோல் கடும் போட்டி நிலவுகிறது

ஸ்பிரிங்பீல்ட், ஓக. 24

அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் குடியரசுக் கட்சி வேட்பாளர் பொப்டோலுக்கும் ஜனநாயகக் கட்சி வேட்பாளர் பில் கிளின்ரனுக்கும் இடையில் கடும் போட்டி நிலவுவதாகக் கடைசியாக எடுக்கப்பட்ட பொதுசன அபிப்பிராய வாக்குக் கணிப்பீடு ஒன்று தெரிவிக்கிறது.

நியூஸ்வீக் சஞ்சிகை நடத்திய அபிப்பிராய வாக்கெடுப்பில் பொப்டோலுக்கு 42 சதவீதமானோரின் ஆதரவும் —

பில் கிளின்ரனுக்கு 44 சதவீதமானோரின்ஆதரவும்இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது

(இ)

## நீதிபதிகளின் கொடும்பாவி சென்னையில் எரிப்பு!

### வீரமணி உட்பட 150 பேர் கைது

உச்ச நீதிமன்றத்தின் இரு நீதிபதிகளின் கொடும்பாவிகளை எரித்ததற்காக திராவிடர்கழகப் பொதுச்செயலாளர் கி. வீரமணி உட்பட 150 தொண்டர்கள் நேற்று முன்தினம் சென்னையில் கைது செய்யப்பட்டனர்.

69 சதவீத ஒதுக்கீட்டில் உச்ச நீதிமன்றத் தீர்ப்புக்கு எதிராக இவர்கள் ஆர்ப்பாட்டம் செய்தனர். (இ-3)

## பங்களாதேஷில் மாணவர்கள் மோதல்

டாக்கா: ஓக 25

பங்களாதேஷில் முக்கிய அரசியல் கட்சிகளை ஆதரிக்கும் இரு கோஷ்டிகளைச் சேர்ந்த பல்கலைக்கழக மாணவர்கள் மோதிக்கொண்டனர்.

டாக்கா பல்கலைக்கழக வளாகத்திற்குள் துப்பாக்கி வேட்டுச் சத்தங்கள் கேட்டதாகவும் —

கலவரத்தை அடக்கிப்பொலிசார் மாணவர்களின் விடுதிகளில் ஆயுதங்களைத் தேடும் பணியில் ஈடுபட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

(இ-10)

## அ. தி. மு. க சின்னத்தைபோட்டிக்குழு பயன் படுத்துவதற்கு எதிராக மனு!

### ஜெயலலிதா தாக்கல் செய்தார்

சென்னை ஓக. 25

அ. தி. மு. கட்சியின் கொடி, சின்னம், பெயர் ஆகியவற்றை போட்டிக்குழுவைச் சேர்ந்த எஸ். வி. சோமசுந்தரம், எஸ். முத்துச்சாமி, எஸ். கண்ணப்பன் ஆகியோர் பயன்படுத்துவதை தடை செய்ய வேண்டும் என்று கோரி அ. தி. மு. க. பொதுச்செயலாளர் செல்வி ஜெயலலிதா நகர சிவில் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளார்,

இது தொடர்பாக பத்திரிகைகளில் செல்வி ஜெயலலிதா தகவல் வெளியிட வேண்டும் என்று நீதிமன்றம் உத்தரவிட்டது.

இந்த வழக்கு விசாரணை எதிர்வரும் செவ்வாய்க்கிழமைக்கு ஒத்திவைக்கப்பட்டது.

அ. தி. மு. கவின் கொடி, சின்னம்ஆகியவற்றுக்குஉரிமை கோரப்போவதாக முன்னாள் அமைச்சர் முத்துச்சாமி தலைமையிலான போட்டிக்குழு அறிவித்திருந்தது தெரிந்ததே.

பொதுச்செயலாளர் பதவியில் இருந்தும், அடிப்படை உறுப்பினர் பதவியில் இருந்தும் ஜெயலலிதாவை நீக்குவது என்று போட்டிக்குழு தீர்மானித்திருப்பது குறிப்பிடத்தக்கது.

(இ-3)

## கட்சியின் பொதுக்குழுவை ஜெயலலிதா கூட்டுகிறார்

சென்னை, ஓக. 25

அ. தி. மு. க பொதுச் செயலாளர் செல்வி ஜெயலலிதா கட்சியின் பொதுக்குழுக் கூட்டத்தை அடுத்த மாதம் 3 ஆம் திகதி கூட்டவிருக்கிறார்.

சென்னையில் அவர் நேற்று வெளியிட்ட அறிக்கை ஒன்றில், பொதுக்குழுக் கூட்டம் குறித்து பொதுக்குழு உறுப்பினர்களுக்கு தனித்தனியாக அழைப்பு அனுப்பப்படும் என்று தெரிவித்தார்.

இக்கட்சியின் போட்டிக்குழுவினர் கடந்த செவ்வாய்க்கிழமையன்று தாங்கள் கூட்டிய பொதுக்குழுக் கூட்டத்தில் செல்வி ஜெயலலிதா அக்கட்சியின் பொதுச்செயலாளர் பதவியில் இருந்து நீக்கப்படுவதாகவும் —

அதற்குப் பதிலாக முன்னாள் மாநில அமைச்சர் எஸ். முத்துச்சாமி பொதுச்செயலாளராக நியமிக்கப்படுவதாகவும்— அறிவித்திருந்தது தெரிந்ததே. (இ-3)

## மனு தள்ளுபடி

சென்னை, ஓக. 25

முன்னாள் அமைச்சர்கள் செங்கோட்டையன், ரகுபதி ஆகியோர் முன் ஜாமீன் கோரி தாக்கல் செய்த மனுக்களை சென்னை உயர் நீதிமன்றம் தள்ளுபடி செய்தது.

(இ-3)

## உலக அரங்கில்

## பர்மாவில் சிறைத்தண்டனை

பர்மா ஓக. 25

பர்மாவில் ஜனநாயக எழுச்சி இயக்கத் தலைவி அவுசான் சூதியின் தனிப்பட்ட பாதுகாவலர் ஒருவருக்கும், எதிர்க்கட்சி ஆதரவாளர்கள் இருவருக்கும் பர்மா மக்கள் இராணுவத்தால் 7 ஆண்டு சிறைத் தண்டனை வழங்கப்பட்டது.

பர்மாவிலுள்ள பிரச்சினைகள் சம்பந்தப்பட்ட வீடியோ படத்தைத் தயாரித்து, இராசத் துரோகம் இழைத்தது ஆகிய குற்றச்சாட்டு இவர்கள் மீது சுமத்தப்பட்டிருந்தது. (இ-10)

யே. ம. சூ. துணை

## ★ திருமண அழைப்பு ★

அன்புடையீர்:

நிகழும் மங்களகரமான தாது வருடம் ஆவணி மாதம், இருபத்தெட்டாம் திகதி (28 - 08 - 1996) புதன்கிழமை காலை 10 மணிக்கு,

| எமது புத்திரி | எமது புத்திரன் |
| --- | --- |
| திருநிறை செல்வி | திருநிறை செல்வன் |
| **செல்வறாணி** | **ஞானரத்தினம்** (குணம்) |
| (ஆசிரியை R. C. T. M. S சுன்னாகம்) | (சாவகச்சேரி, ஆனந்தஜோதி வைத்தியசாலை) |
| அவர்களுக்கும், | அவர்களுக்கும், |

யாழ்/ குருநகர் புனித யாகப்பர் ஆலயத்தில் திருமணத்திருப்பலி நடத்தப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால், அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து மணமக்களை வாழ்த்தி அதனைத் தொடர்ந்து மணமகள் இல்லத்தில் நடைபெறும் விருந்துபசாரத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கிறோம்.

★ தங்கள் நல்வரவை நாடும் ★

திரு. திருமதி அமிர்தநாதனும் பிள்ளைகளும்
''அகவொளி'' (மரியா ஹொட்டல்)
131, பாங்சால் வீதி, குருநகர்.

திருமதி எவுசேனி அந்தோனியும் பிள்ளைகளும்
தவசிகுளம்,
கொடிகாமம்.

நிரந்தர முகவரி: ''றோசா வாசா''
Dr சுப்பிரமணியம் வீதி, சுன்னாகம்.

முக்கிய குறிப்பு:

தற்கால சூழ்நிலை காரணமாக தனிப்பட்ட அழைப்பிதழ்கள் அனுப்பமுடியாமைக்கு வருந்துகிறோம். எனவே இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.

(42393)

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

C.N 8461 இலக்கமுடைய நல்ல நிலையில் உள்ள A 40 வான் விற்பனைக்குண்டு. தொடர்பு: க. மு. அ. கோபாலசாமி, 81/A, சிவன் பண்ணைவீதி, யாழ்ப்பாணம். (வைத்தீஸ்வராக் கல்லூரிக்கு அருகில்). (42355)

### ஆங்கிலக் கல்வி

வீட்டில் வந்து ஆங்கிலம் கற்பிக்கப்படும். ஆண்டு 11 முதல் கீழ்வகுப்பு வரை. பாடத்தில் குறைவானவர்களுக்கு அடிப்படையில் இருந்து கற்பிக்கப்படும். கடித மூலம் தொடர்பு கொள்ளவும். இல: 515, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (42364)

### திருமணசேவை

மல்லாகத்தில் இயங்கிய துர்க்கா திருமண சேவை தற்பொழுது மாயக்க பிள்ளையார் கோவிலடி, தம்பசிட்டி, புலோலி மேற்கு, புலோலி எனும் முகவரியில் இயங்குகிறது. நாவலர் றோட், பிறவுண்றோட் சந்தியில் புதனும், திங்களும் சந்திக்கலாம். (42351)

### SPOKEN ENGLISH

சுலபமான முறையில் ஆரம்பத்தில் இருந்து ஆங்கிலம் பேசுவதற்கு பயிற்சி அளிக்கப்படும். மாதக் கட்டணம் 16 வயதிற்கு உட்பட்டவர்களுக்கு ரூபா 50/-, மேற்பட்டவர்களுக்கு ரூபா 100/- ஆசிரியர் ந. விக்கினேஸ்வரன் ஆச்சாரி, C/o ஜெயந்தி ஸ்ரோஸ், இல: 426, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (வண்ணார் பண்ணை சிவன் கோவில் சந்தி) (42374)

### ஆங்கிலம் / கணிதம்

Distinction, Credit பெறுபேறடைய (ஆண்டு 10, 9 உட்பட) கற்பிக்கப்படும். 10 வருட Paper Classes தினமும் பகல் 8- 12, பிற்பகல் 3- 6 வரை, London Inter ஆசிரியர் 85, சிவன் கோவிலடி, திருநெல்வேலி. (42342)

### பாலர் ஆசிரியராக

பாலர் ஆசிரியர் பயிற்சி தபால் வழியில் நடைபெறுகிறது. க.பொ.த (சா.த.) கடைசித் தகைமையாகும். உடன் விண்ணப்பிக்குக. பாலர் ஆசிரியர் சங்கம், மே/பா. திரு. வீ. கே. கந்தசாமி, ''பழமுதிர்சோலை'', 20, அச்சக ஒழுங்கை, கொக்குவில் கிழக்கு, கொக்குவில். (42277)

### மணமகன் தேவை

உயர் குடும்பத்தைச் சேர்ந்த, 39 வயதுடைய பெண்ணுக்கு மணமகன் உடன் தேவை. தாவர போசனம் விரும்பத்தக்கது. கடித மூலம் தொடர்பு கொள்ளவும். இல: 516, மே/பா உதயன் பணிமனை, யாழ்ப்பாணம். (42382)

### தென்னம் நாற்றுக்கள்

உடன் நடுகைக்கு உகந்த தென்னம் நாற்றுக்கள் (பல இனங்கள்) விற்பனைக்கு உண்டு. வியாபாரிகளுக்கு விஷேட கழிவு உண்டு. மு. காங்கேசு, ஐயா கடையடி, கண்டிவீதி, மீசாலை (42285)

### நுளம்புத் தொல்லையா

நீம் சுகாதார தூபம். நாம் புகைத்தால் இரவில் நுளம்புத் தொல்லை இல்லை. பக்க விளைவுமில்லை. கமழும் நறுமணம் சுகந்தம். அண்ணா கோப்பி கடைகளிலும் கிடைக்கும். மில்க்வைற். (சி- 2790)

### O/L MATHS

ஆரம்ப அறிவேயில்லாதவர்களுக்கும், இதுவரை சித்தி அடையாதவர்களுக்கும் 30 வருட அநுபவமுடைய ஆசிரியரினால் 40 மணித்தியாலங்களில் Distinction பெறுபேறடையக் கற்பிக்கப்படும். ஆறுமுகநாதன், இல: 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, சுண்டிக்குழி, யாழ்ப்பாணம். (42365)

### இலவச திருமண சேவை

மணமக்கள் தேர்வு இலவசம். சோதிட ஆய்வுக்கும் சாதகக் கணிப்புக்கும் கு சி. பிள்ளை, ''வரோதயன்'' திரு வீதி, உரும்பராய் வடக்கு, (பிரதேச சபை அலுவலக அருகில்) உரும்பராய். (42377)

### தவறிவிட்டது

எனது மூக்குக் கண்ணாடி 20 8.96 இல் சங்கானை சந்தைக்கு அண்மையாக தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து கீழ்க் காணும் விலாசத்தில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும்: ச. யோகீஸ்வரன், அரசினர் வைத்திய சாலை, சங்கானை அல்லது கவாஜோதி புத்தக நிலையம், சங்கானை. (42399)

### வீடு விற்பனைக்கு

யாழ்ப்பாணம் சுண்டுக்குளி மகளிர் கல்லூரி, சென் ஜோன்ஸ் கல்லூரி ஆகியவற்றுக்கு அண்மையில் 3 பரப்பு காணியில் அமைந்துள்ள சகல வசதிகளுடன் கூடிய மாடிவீடு விற்பனைக்குள்ளது திணைக்களங்கள், அரசு சார்பற்ற நிறுவனங்கள், பல்கலைக்கழக விடுதிகள் அமைப்பதற்குப் பொருத்தமானது. தொடர்பு: பா. தவபாலன் சட்டத்தரணி, இல 82/5 நல்லூர் குறுக்கு வீதி, நல்லூர். (42397)

**A|L 97 98**

தமிழ்
ஜெயநிதி
இந்துநாகரிகம்
சமயம்
ஈஸ்வரன்
நடைபெறுகிறது.

**சிவாகி கல்வி நிலையம்**

சாவகச்சேரி

(42380)

## வடக்கு - கிழக்குக்கு வெளியே செல்ல

# மாகாண உயர் அதிகாரியின் அனுமதி பெறவேண்டும்

வடக்கு – கிழக்கு மாகாண நிர்வாகத்தின் கீழ் இயங்கும் அரச நிறுவனங்களின் தலைவர்கள் மற்றும் அதிகாரிகள் காரியாலய விடயமாக கொழும்புக்கோ அல்லது வடக்கு - கிழக்குக்கு வெளியிலோ செல்ல வேண்டுமாயின் மாகாண உயர் அதிகாரிகளின் அனுமதியைப் பெற வேண்டும்.

வடக்கு - கிழக்கு மாகாண சபை பிரதம செயலாளர் ஜி. கிருஷ்ணமூர்த்தி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நிர்வாகத்தில் ஏற்படும் இடைவெளியை நிவர்த்தி செய்வதற்கும், சில அதிகாரிகள் வாகனங்களை தவறான முறையில் பயன்படுத்துவதைத்தடுப்பதற்கும் மேற்படி நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுஎன்றும் அவர் கூறினார்.

சுகாதாரத் திணைக்களம், பிரதேச செயலகம், கல்வித் திணைக்களம் போன்றவற்றின் அதிகாரிகளுக்கு இது முக்கியமாகக் கட்டுப்படுத்தப் பட்டுள்ளது என்றும் அவர் கூறினார். (இ-3)

## வெற்றிலை விலை வீழ்ச்சி

சாவகச்சேரி சந்தைக்கு கொழும்பு வெற்றிலை பெருமளவில் வந்ததால் வெற்றிலை விலை வீழ்ச்சி அடைந்துள்ளது.

ரூபா 15 வரை விற்பனை செய்யப்பட்ட வெற்றிலை தற்போது 3.50 வரை விற்பனை செய்யப்படுகிறது. (இ-117)

## கண்ணீர் அஞ்சலி

### பொன்னம்பலம் சோமசுந்தரம்

(உரிமையாளர் P. Somasundaram & Co.
ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்)

அவர்களின் மறைவையொட்டி ஆற்றொணாத் துயருறுவதுடன், அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

பத்மநாதன் குடும்பத்தினர்
(றிக்கோ)

செந்தாமரை
22/3 A, விதானை வீதி,
சுண்டிக்குளி,
யாழ்ப்பாணம். (42396)

## 47 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

மலர்வு: 23 — 05 — 1946



உதிர்வு: 11 — 07 — 1996

அமரர்

### வைரவப்பிள்ளை இராசதுரை

(போமன் சின்னராசா)
(லொறி உரிமையாளர், கொல்லங்கலட்டி, தெல்லிப்பளை)

அன்பின் உறைவிடமாகவும், பாசத்தின் திருவுருவமாகவும் எங்கள் குடும்பத்தின் குலவிளக்காய் சுடர் வீசி, அணையாத தீபமாகி எங்களை மண்ணில் தவிக்க விட்டு எங்கு சென்றீர்கள். ஐயா, உங்கள் ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அன்புடையீர்,

சென்ற ஆனித்திங்கள் 27ஆம் நாள் ஏகாதசி கார்த்திகை (11-07-1996) வியாழக்கிழமை இறைநீழலடைந்த வைரவப்பிள்ளை – இராசதுரை அவர்களின் ஆத்ம சாந்திக் கிரியைகள் துணைவி இல்லத்தில் (சங்கரத்தை, வட்டுக்கோட்டையில்) நாளை 26-08-1996 திங்கள் நடைபெறும். அக்கிரியைகளிலும், மதிய போசனத்திலும் நண்பர்கள், உற்றார், உறவினர் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம். இக்காலகட்ட சூழ்நிலை காரணமாக நேரில் அறியத்தரமுடியவில்லை.

இங்ஙனம்!
குடும்பத்தினர்

சங்கரத்தை,
வட்டுக்கோட்டை. (42388)

†

# அமரர் டாக்டர் A. L. ஏபிரகாம்

அவர்களின்

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

சமூக மேம்பாட்டுக்காக தன் வாழ்நாள் எல்லாம்
அயராது உழைத்து மறைந்த பெருமகனாருக்கு
**எம் மனம் நிறை அஞ்சலி**

## குருநகர் வர்த்தகர்கள்

யாழ்ப்பாணம். [42594]

ஏகோபித்த மக்களின் வேண்டுகோளுக்கிணங்க மீண்டும் பிரதான வீதியில்

**போட்டோ கோப்பி சேவை** PRINTO STYLE PHOTO ON LIGHT முறையில்

ENLARGEMENT REDUCTION வசதிகளுடன்

போட்டோ கொப்பி செய்துகொள்ள

# ஷண்முகா பார்மசி அன் குரோசறி

இல: 65 (185), பிரதான வீதி, யாழ்ப்பாணம். (42338)

## உதயன்

### இழுத்தடிப்பு பயன்தராது

அதிகாரப் பகிர்வுக்கு வழி செய்யும் அரசமைப்புத் திருத்தச் சட்டம், 1997 ஆம் ஆண்டின் முதற் காலாண்டுப் பகுதிக்குள் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுவிடும் என்று அமைச்சர் பீரிஸ் நம்பிக்கை தெரிவித்திருக்கிறார்; அறிவித்திருக்கிறார்.

அதிகாரப் பகிர்வுத் திட்டத்தை அரசாங்கம் கடந்த வருடம் ஓகஸ்ட் மாதம் மூன்றாம் திகதி உத்தியோக பூர்வமாக வெளியிட்டிருந்தது.

ஒரு வருடம் கடந்து போன வேளையில், உத்தேச தீர்வுத் திட்டத்தை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு மேலும் ஆறு மாதங்கள் தேவை என்று இப்போது சொல்லப்படுகிறது.

எனினும் நடைமுறையில் மேலும் ஆறுமாதங்கள் இழுபட்டு இன்னும் ஒரு வருடத்தின் பின்னர் தான் நாடாளுமன்றத்தை அது எட்டிப் பார்க்கும் என்று கணக்கிடவாம்.

ஜனாதிபதி சந்திரிகா மற்றும் அமைச்சர் பீரிஸ் போன்றோர் பொதுக் கூட்டங்களில் பேசுவதை அவதானித்தால் — இனப்பிரச்சினைக்குரிய அரசியல் தீர்வைக் காணும் பணி படிப்படியாகவே நடக்கும் என்று சொல்வதைக் கருத்தில் எடுத்தால்—

அரசின் தீர்வுத் திட்டம் சட்ட வடிவம் எடுப்பதற்கு இன்னும் ஒரு வருட காலமும் போதாது என்று அவர்கள் தமக்குள் கணக்கு வைத்திருப்பதாகத் தெரிகிறது!

அடுத்த ஆண்டு இறுதியில் தான் போர் முடிவுக்குக் கொண்டு வரப்படும் என்று ஜனாதிபதி அறிவித்திருப்பதும், அரசியல் தீர்வு காண்பதற்கான கால அட்டவணை இன்னும் ஒரு வருடத்திற்கு மேலாகும் என்பதனை மறைபொருளாகச் சொல்கிறது.

மொத்தத்தில்—

போரும் முடியாது; அரசியல் தீர்வும் நடைமுறைக்கு வராது; என்ற ஒரு சூன்ய நிலை நீடிக்குமோ என்ற அச்சம் இயல்பாக எழுகிறது.

எந்தச் செயலையும் சூட்டோடு சூடு செய்துவிடுவதால் பிரச்சினை எதனையும் விரைவில் போக்கலாம். ஆறிய கஞ்சி பழைய கஞ்சியாகி விடும். அந்தக் கதி தான் அரசின் அரசியல் தீர்வு முயற்சிக்கும் ஆகுமோ என்று கருதவேண்டியுள்ளது.

ஒற்றையாட்சி, வடக்கு-கிழக்கைப் பிரிப்பது என்ற தனது நிலைப்பாட்டை மாற்றப்போவதில்லை என்று ஐக்கிய தேசியக்கட்சி அறிவித்திருப்பது, அரசுக்கு எதிராக மக்கள் போராட்டம் ஒன்றை நடத்த அக்கட்சி உத்தேசித்திருப்பது—

அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் கட்சிகளுக்கு இடையேயான உட்பூசல்; ஜனநாயக வழிக்குத் திரும்பிய தமிழ்க் கட்சிகளின் ஆதரவைப் பெறும் விதத்தில் அவர்களுக்குத் திருப்தியான தீர்வை உருவாக்குவதில் ஏற்பட்டுள்ள முட்டுக்கட்டை; போரைத் தொடர்வதால் உண்டாகும் பொருளாதாரப் பலவீனத்தால் தெற்கு மக்கள் மத்தியில் ஏற்படக் கூடிய மாற்றங்கள்; என்பன அரசின் தீர்வு முயற்சியை அரை வழியில் மறித்துத் திருப்பி விடலாம்.

இது விவகாரத்தை இழுத்தடிக்க, இழுத்தடிக்க, அரசியல் தீர்வு நந்தவனத்து ஆண்டியின் தோண்டியாகி விடலாம் அல்லவா?

# ஆளும் கூட்டணிக்குள் உட்கட்சிப் பூசல் தீவிரம்!

ஆளும் பொது மக்கள் ஐக்கிய முன்னணிக் கூட்டணிக்குள் உட்பூசல்கள் அதிகரித்திருப்பதாக கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசை நாடாளுமன்றத்திலும், வெளியிலும் கடுமையாக விமர்சித்து வரும் இரு எம்.பிக்களை தொடர்ந்து அப்படிச் செய்ய வேண்டாம் என எழுத்து மூலம் கோரும்படி முன்னணியின் செயலாளருக்கு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க உத்தரவிட்டிருக்கின்றார்.

கடந்த திங்களன்று நடைபெற்ற அரசாங்கத்தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களின் கூட்டத்தில் இந்த விடயம் முதலில் பிரஸ்தாபிக்கப்பட்டது.

அவசரகாலச் சட்டத்தை நீடிப்பதற்கான பிரேரணை நாடாளுமன்றத்தில் கடந்த முறை எடுத்துக் கொள்ளப்பட்டபோது, அரச தரப்புக்குரிய நேரத்தைப் பயன்படுத்தி உரையாற்றிய— ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியைச் சேர்ந்த — ரவி கருணாநாயக்கா அரசாங்கத்தைத் தாறுமாறாகத் தாக்கிப் பேசினார் என்று தபால், தொலைத் தொடர்புகள் அமைச்சர் மங்கள சமரவீர குற்றஞ் சுமத்தினார்.

லங்கா சமசமாஜக்கட்சியைச் சேர்ந்த வாசுதேவநாணயக்காராவும் நாடாளுமன்றத்திலும், வெளியிலும் அரசைக் கடுமையாகத் தாக்கிப் பேசி வருகின்றார் என்ற விவரத்தையும் அமைச்சர் மங்கள சமரவீர உதாரணங்களுடன் அங்கு வெளியிட்டார்.

அரச நாடாளுமன்றக்குழுக் கூட்டத்துக்குத் தலைமை வகித்த ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, தமக்கு மிக நெருங்கியவரான அமைச்சர் மங்களசமரவீர தெரிவித்த இக்குற்றச்சாட்டுக்களை அடுத்து —

எதிர்காலத்தில் நாடாளுமன்றத்தில் அரசை விமர்சிக்க வேண்டாம் என சம்பந்தப்பட்ட இரு எம். பிக்களுக்கும் கடிதம் மூலம் அறிவிக்கும்படி பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் செயலாளரான அமைச்சர் டி. எம். ஜெயரட்ணாவைப் பணித்தார்.

இந்த விவகாரம் அரச நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தில் பிரஸ்தாபிக்கப்பட்ட சமயம் சம்பந்தப்பட்ட இரு எம்.பிக்களும் கூட்டத்தில் இருக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

மேற்படி இரு எம். பிக்களுக்கும் ஜனாதிபதியின் கோரிக்கையை இவ்வாரத்தில் எழுத்து மூலம் டி. எம் ஜெயரட்ணா அனுப்பி வைத்திருந்தார்.

ஆனால் இக்கோரிக்கையை அந்த எம். பிக்கள் ஏற்பார் என்றோ அல்லது அவர்கள் சார்ந்த கட்சிகள் ஏற்கும் என்றோ எதிர்பார்க்க முடியாது என அவதானிகள் கருத்து வெளியிட்டனர்.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அமைப்பு உருவாக்கப்பட்டது தொடர்பான உடன்படிக்கையின்படி —

கூட்டணியைச் சேர்ந்த — ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி, லங்கா சமசமாஜக் கட்சி போன்றவற்றின் — நாடாளுமன்ற உறுப்பினர்கள் தங்கள் கட்சியின் நிலைப்பாட்டிற்கேற்ப தங்கள் சுய கருத்துக்களை வெளியிட உரிமையுள்ளவர்கள் என்று அதிகார வட்டாரங்கள் சுட்டிக் காட்டுகின்றன.

இந்த விடயத்தில் தம்மை நியாயப்படுத்தும் வகையில் எவ்வாறு செயற்படுவது என்பது வாசுதேவ நாணயக்காராவுக்கு நன்கு தெரியும் என்று கூறப்படுகின்றது.

அதே போல ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியும் தனது எம். பி யின் விவகாரத்தில்கடுமையாக நிற்கும் என்று தெரிகின்றது.

'அமைச்சரவை உறுப்பினராக இருக்கும் தமது கட்சித் தலைவி ஸ்ரீ மாணி அத்துலத் முதலியையே அரசின் தலைவியான ஜனாதிபதி சந்திரிகாவே கடுமையாக விமர்சித்திருக்கின்றார்.

அதுதவிர, துடிப்புள்ள ஜனநாயக ஆட்சி முறை நீடிக்கின்றது என்பதை அரசு நிருபிக்க விரும்பினால், கட்சி எம். பிக்களின் கருத்து வெளியிடும் சுதந்திரத்தைக் கட்டுப்படுத்தக் கூடாது. — இவ்வாறு அக்கட்சி கூறுகின்றது.

தனது எம். பிக்களுக்கு எதிராக உரிய காரணமின்றி நடவடிக்கை எடுக்க அனுமதிக்க முடியாது என்று அக்கட்சியின் தலைவி ஸ்ரீமாணி அத்துலத்முதலி கூறுகின்றார்.

எனவே இவ்விரு கட்சிகளும் பொதுமக்கள் ஐக்கிய முன்னணிக்குள் முரண்டு பிடிக்கும் போக்கையே பின்பற்றப் போகின்றன என்று துலாம்பரமாக தெரிகின்றது.

### மீண்டும் குமுதினி படகுச் சேவை

யாழ்ப்பாணம்- ஓக. 25

நெடுந்தீவுக்கான குமுதினி படகுச்சேவை மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இதற்கு முன்னோடியாக குமுதினி படகு திருத்தியமைக்கப்பட்டுள்ளது.

இத்தகவலை யாழ். செயலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதற்காக விரைவில் கொழும்பிலிருந்து புதிய இயந்திரம் ஒன்று தருவிக்கப்படும் என்றும்—

நெடுந்தீவுக்கான இப்படகுச் சேவை குறிகட்டுவானிலிருந்து நடைபெறும் என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டது, (இ-5)

### முளையில் கிள்ள வேண்டியவை

இன்று எமது பகுதியில் சமூகச் சீர்கேட்டுக்கான புதிய புதியசெயற்பாடுகள் ஆரம்பமாகி வருகின்றன. இதைக் கண்டும் காணாதவர்கள் போல பொறுப்புள்ளவர்களும், அச்சூழலில் வாழ்வோரும் அலட்சியப்படுத்துவதால் நாளுக்கு நாள் தீய சக்திகள் வளர்ச்சிகண்டே வருகின்றன.

மிக முக்கியமாக கசிப்பு, களவுகள், பதுக்கல், வீடியோ படக்காட்சி ஒன்றோடு ஒன்று தொடர்புபட்டு வளர்ந்து வருகின்றன.

கசிப்பு — இது இன்று பல இடங்களிலும் திருவிழாக் கால கச்சான் கடைகள் போன்று மலிந்து வருகின்றன. வழிபாட்டுத் தலங்கள், பாடசாலைகளுக்கு அருகிலும் ''பெருங்குடி'' மக்களின் நடமாட்டம் காணப்படுகிறது. மாணவர்களுக்கும், இளைஞர்களுக்கும் முன்மாதிரியாக நடக்க வேண்டிய பெரியவர்களே கீழ் நிலைப் பழக்கத்தை வளர்க்கத் தூண்டுகிறார்கள்.

இச் சமூகச் சீர்கேடுகள் எமது வருங்காலப் பிரஜைகளை நாசம் செய்துவிடாது முளையிலேயே கிள்ளிவிட வேண்டும். வருமுன் காக்கும் விழிப்புணர்வுடன்செயற்படாவிடில் பெரும் சீரழிவைக் கொண்டுவரும்.

இப்புதிய சமூகச் சீர்கேடுகளை வளர்ப்பதற்குத் துணை போவோரை, தண்டித்துத் தான் திருத்த வேண்டும் என்ற தேவை ஏற்படும் பட்சத்தில் சட்டம், ஒழுங்கு, நீதியை நிலைநாட்டும் பொறுப்புடைய நிறுவனங்களின் உதவியை நாட வேண்டும். உரிய நேரத்தில் நல்லது செய்யப்படாவிடில் தீயவை எமது சமூகத்தைச் சுற்றி வளைத்துவிடும்.

கோவில்வீதி,
யாழ்ப்பாணம்.
செ. சூசைதாசன்

### தபால்: இரு வழி அவசியம்

தற்போதைய நிலையிலும் யாழ். குடாநாட்டு மக்களுக்கான தபாற்சேவையைத் திறம்பட நடத்துவதற்கு இங்குள்ள அதிகாரிகள் தம்மாலான முயற்சிகளை எடுத்து வருவது பாராட்டுக்குரியது.

இங்கிருந்து வெளியே தபால்களைத் தாமதமின்றி அனுப்புவதற்கு அவர்கள் செய்துள்ள ஏற்பாடுகள் வெற்றிகரமாகவே தோன்றினாலும் தபாற் சேவை திருப்திகரமாக நடைபெறுகிறதா என்றால், ''இல்லை'' என்றே வருத்தத்துடன் கூறவேண்டியுள்ளது.

ஏனெனில் வெளியூர்களிலிருந்து இங்கு கடிதங்கள் வருவதாகவே தெரியவில்லை. மாதக்கணக்காக வெளியூர் மற்றும் வெளிநாட்டுக் கடிதங்களுக்காக ஆவலும் அவசரமுமாய்க் காத்திருந்தும் பொதுமக்கள் தொடர்ந்தும் ஏமாந்த வண்ணமாகவே உள்ளனர்.

தத் தம் வீடுகளுக்குத் திரும்பியுள்ள மக்கள், வெளியே உள்ள தமது உறவினர், நண்பர்களுக்கு இங்கு திரும்பியமை பற்றி எழுதியும் கூட இன்னமும் — நாலு மாத காலங்கள் கழிந்தும் — பதில் வரவில்லை என்று கவலையுறுகிறார்கள். அனுப்பிய கடிதங்கள் போய்ச் சேர்ந்தனவா என்று கூட அறிய முடியாது அவதியுறுகிறார்கள்.

அனுப்பிய கடிதங்களுக்குப் பதிலே இல்லாமல் எத்தனை நாள்களுக்குத் தான் இங்கிருந்தே எழுதிக்கொண்டிருப்பது? இரு வழிப் போக்குவரத்து சீராக இல்லாத தபால் சேவையில் அர்த்தமில்லை. சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தயவு செய்து ஆவன செய்து உதவ வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்.

குளப்பிட்டி, கொக்குவில் — இரத்தின- விக்னராஜ்

### மதிப்பு இரந்து கேட்பதல்ல

உதயன் 'வாசகர் திருமுகம்' பகுதியில் 14-08 96 இல் வெளிவந்த விடயங்கள் யாவும் உண்மை. சமயகுருமார் மதிப்பளித்துக் கௌரவிக்கப்பட வேண்டியவர்களே. உடல்முழுவதும் உப்புப் படிந்தபடியே வந்த தொழிலாளியை அரசன் தேரிலிருந்து இறங்கி வணங்கிய புராண வரலாறுகளை உள்ளடக்கியது எமது மதம்.

எப்படி இருந்தபோதிலும் கனி தானாக பழுக்க வேண்டும். வெம்பிப் பழுக்கக் கூடாது. மரம் பழுத்தால் வௌவாலை வா என்று கூவி அழைப்பார் யாவரும் அங்கில்லை''. மதிப்பு மரியாதை எல்லாம் தானாக வரவேண்டும்.

அதற்கு குருமார்கள் என்ன செய்ய வேண்டும்? 'ஓதலின் நன்றே வேதியர் ஒழுக்கம்' ஒழுக்கமாக இருக்க வேண்டும். காயத்திரி ஜெபம், தியானம் செய்தல் வேண்டும். இதனால் அவர்களின் ஆத்ம சக்தி வளரும். தெய்வீக சக்தி அவர்களிடம் தவழ்ந்து விளையாடும். இதனால் அவர்கள் முகத்தில் ஒளிவரும்.

தனம் தரும் கல்வி தரும் யாருக்கு? அன்பர் என்பவருக்கே!

எமது சைவ மக்கள் குருமாரை என்றென்றும் ஏத்தி வந்தவர்கள் என்பது சகலரும் அறிந்ததே. எனவே எமது சமய குருமார்கள் மதிப்பை இரந்து பெறாமல் தங்கள் தெய்வீகத்தன்மையால் பெறவேண்டும் என்பதே எனது பணிவான கருத்து.

கே. கே. எஸ். வீதி, யாழ். — இ. விஜயரத்தினம்

### நல்லூர் வீதியில்...!

எந்நாளும் நல்லூரை வலம் வந்து வணங்கினால்
இடர்கள் எல்லாம் போமே
அந்நாளில் ஆசான் அருந்தவம் செய்த இடம்
அதுவாத லாலே அதிசயம் மெத்த உண்டு

★ ★ ★ ★ ★

வேதாந்த சித்தாந்தம் கற்றதனா லென்ன
வேடிக்கைக் கதைகள் பேசினாலென்ன
வீதியில் வந்தொருக்கால் விழுந்து கும்பிட்டால்
வில்லங்கம் எல்லாம் இல்லாமல் போமே!

— யோகர்சுவாமிகள்

### சோதனை போதாதோ?

ராகம்— நாட்டை தாளம்— ஆதி

பல்லவி

வேதனை தீராயோ முருகையனே? இன்னும்
சோதனை போதாதோ நல்லையனே?- எங்கள்
(வேத .....)

அனுபல்லவி

நாதத்தின் பொருள் சொன்ன சற்குருவே- சுவாமி
நாதனாய்ப் பெயர் கொண்ட நிர்க்குணனே- குமரா
(வேத .....)

சரணம்

பழவினையாற் துன்பம் வதைக்கின்றதே- துயர்
பலமுனையால் இன்னும் சிதைக்கின்றதே- வளர்
பகலிரவாய் நெஞ்சம் பதைக்கின்றதே- உந்தன்
பதநிழலை நெஞ்சம் இரக்கின்றதே- முருகா!
(வேத......)

''வயலூர் முருகன்''

நல்லூர் உற்சவ கால சிறப்பம்சம்

## ரத்வத்தை...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

என்பது குறிப்பிடத்தக்கது.

கடந்த திங்கட்கிழமை கொழும்பு ஹைட் பார்க் திடலில் நடைபெற்ற ஐ. தே. க. பொதுக் கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே அனுரா மேற்படி அறிவிப்பை விடுத்தார்.

மின்சக்தி, எரிபொருள் அமைச்சரும் பிரதிப் பாதுகாப்பு அமைச்சருமான ஜெனரல் ரத்வத்தை அண்மையில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுக் கூட்டம் ஒன்றில் ஆற்றிய உரை தொடர்பாகவே அனுரா வழக்குத் தாக்கல் செய்ய முடிவு செய்திருக்கின்றார்.

தமது தாயாரும் பிரதமருமான திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவுடன் கலந்தாலோசித்த பின்னரே ஜெனரல் ரத்வத்தைக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யும் முடிவை அனுரா எடுத்ததாகவும் அறிய வருகின்றது.

இரத்தினபுரிக் கூட்டத்தில் அனுராவின் தாய் குறித்து ரத்வத்தை கேள்வி எழுப்பியதாகக் கூறப்படுகின்றது. ஜெனரல் ரத்வத்தை இந்த விடயத்தைப் பிரஸ்தாபித்த போது ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும் மேடையில் அமர்ந்து இருந்தார்.

''பண்டாரநாயக்கா குடும்பத்தில் அனுரா பண்டாரநாயக்கா போன்ற குணாம்சங்கள் உள்ள ஒருவர் இருப்பது துரதிர்ஷ்டமே. அமைச்சர் டி. எம். ஜெயரட்ண தெரிவித்த தகவல்களின்படி பிறப்பின்போது குழந்தைகள் மாறிவிட்டன.'' — என்ற சாரப்பட ஜெனரல் ரத்வத்தை தமது உரையில் கருத்து வெளியிட்டதாகக் கூறப்படுகின்றது.

இந்தப் பேச்சு அரசு சார்பு ''லேக் ஹவுஸ்'' நிறுவனத்தின் சிங்கள வெளியீடான ''தினமின'' பத்திரிகையின் ஓகஸ்ட் 12 இதழிலும் பிரசுரமானது.

ஆனால் அனுரா பண்டாரநாயக்காவின் பிறப்புக் குறித்து சந்தேகம் தெரிவிக்கும் கருத்து எதனையும் எந்தச் சந்தர்ப்பத்திலும் தாம் வெளியிடவில்லை என்று அமைச்சர் டி. எம. ஜெயரட்ண மறுத்திருப்பதாக அறியவருகின்றது.

இந்த உரை சிங்களப் பத்திரிகையில் வெளியானாலும் அப்பத்திரிகைக்கு எதிராக அனுரா வழக்குத் தொடரமாட்டார் என்றும்—

ரத்வத்தைக்கு எதிராக மட்டுமே வழக்குத் தொடருவார் என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டது.

ரத்வத்தையின் இந்த உரை பற்றிய தகவல் வெளியானதும் இரத்தினபுரி பகுதியைச் சேர்ந்த — ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் — நீண்டகால உறுப்பினர் ஒருவரை நேரில் அழைத்து அப்படி உரை நிகழ்த்தப்பட்டது உண்மையா என்று பிரதமர் சிறிமாவோ விசாரித்து அறிந்தார் என்றும்—

அதையடுத்தே வழக்குத் தாக்கல் செய்யும் முடிவு எடுக்கப்பட்டதாகவும் அறியவருகின்றது.

வழக்குத் தொடருவதற்கான முன்னறிவிப்புக் கடிதம் இவ்வாரத்தில் அமைச்சர் ரத்வத்தைக்கு அனுப்பி வைக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

பொது மக்கள் ஐக்கிய முன்னணி அரசு ஆட்சிக்கு வந்து இரண்டு வருடங்கள் பூர்த்தியானதை ஒட்டி அரசுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் ஐ. தே. க. ஹைட் பார்க் கூட்டத்தை நடத்தியது தெரிந்ததே. இக்கூட்டத்தில் அனுரா பண்டாரநாயக்கா மேலும் கூறியதாவது:-

எனக்குத் தெரிந்தவரை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க எப்போதும் உண்மை பேசியதே இல்லை.

சரித்திரத்தில் முதல் தடவையாக வெட்கமற்ற சில அமைச்சர்கள் கேள்விப் பத்திர சபையில் (''டெண்டர்'' சபை) இருந்திருக்கிறார்கள். ஆனால் அவர்களால் காலித் துறைமுக கட்டட வேலைகளைப் பூர்த்தி செய்ய முடியவில்லை.

புழுக்களுடன் கூடிய ''சேலைன்'' போத்தல்களை இந்த அரசு தான் இறக்குமதி செய்திருக்கின்றது.

கிழக்கு மாகாணத்தில் இருந்து பல இராணுவ முகாம்களை ஜெனரல் ரத்வத்தை வாபஸ் பெற்றார். அவரின் தூர நோக்கற்ற உத்திகளினால் இன்று அந்த மாகாணத்தின் 90 சதவீதமான பிரதேசத்தைப் பிரபாகரன் ஆள்கின்றார்.

பயனற்ற சில அரசியல்வாதிகள் காரணமாக ஆனந்த ஹமங்கொட போன்ற மிக முக்கியமான இராணுவ அதிகாரிகள் தமது உயிரைத் தியாகம் செய்ய வேண்டி ஏற்பட்டது. அதனால் தான் அரசியல்வாதிகளை யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்ய வேண்டாம் என்று இப்போது துருப்புக்கள் கூறுகின்றன.

முல்லைத்தீவு முகாமை வாபஸ் பெறும்படியும், மிக அதிகமான தொகை ஆயுதங்களை அங்கு வைத்திருக்க வேண்டாம் என்றும் படையினர் நீண்டகாலமாகக் கூறிவந்த போதிலும் அதற்குச் செவிமடுக்கப்படவில்லை.

தம்மை ஜெனரலாக உயர்த்திய பிரதமருக்கு முன்பாக சத்தியப் பிரமாணம் செய்ய மறுக்கும் அளவுக்கு— தான் நினைத்ததைச் செய்யும்— பிடிவாதக்காரர் ஜெனரல் ரத்வத்தை.

ஜனாதிபதி வெளிநாடு சென்றிருந்த போது பதில் அமைச்சராக ஒரு சமாதான நீதிவான் முன்னிலையில் அவர் சத்தியப்பிரமாணம் செய்தார்.

—என்று அனுரா மேலும் கூறினார். (உ)

## துப்பாக்கிச் சூட்டு.

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பாக்கிச் சூட்டுச் சம்பவம் ஒன்றில் அவ்விடத்தைச் சேர்ந்த தம்பிராசா தரணீதரன் (வயது 20) என்பவர் காயமடைந்தார்.

காயமடைந்தவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

வண்ணார் பண்ணை மேற்கில் நேற்று இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் இருவர் படுகாயமடைந்தனர்.

அச்செழுவில் இருந்து இடம்பெயர்ந்து யாழ்ப்பாணம் காங்கேசன்துறை வீதியில் வசித்து வரும் யாழ். இந்துக் கல்லூரி 7 ஆம் ஆண்டு மாணவன் சிதம்பரநாதன் பிரதீபன் (வயது 12)—

மானிப்பாயைச் சேர்ந்த மானிப்பாய் இந்துக் கல்லூரி ஆசிரியர் இராசேந்திரம் வசந்தகுமார் (வயது 40) ஆகியோரே காயம் அடைந்தவர்கள் ஆவர்.

இவர்களும் யாழ். ஆஸ்பத்திரியிலேயே அனுமதிக்கப்பட்டுள்ளனர். (இ-15)

## அ.தி.மு.க.வில்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பட அனைத்து பொறுப்புகளின் இருந்தும் இராஜினாமாச் செய்துள்ளார்,

தமிழ் நாட்டில் முன்னைய ஆட்சிக்கால முறைகேடுகள் குறித்து நாளேடுகளில் தினமும் வெளிவந்து கொண்டிருக்கும் செய்திகள் கட்சியின் உண்மையான விசுவாசிகளுக்கு அவமானத்தை அளிப்பதாக இருக்கின்றன என்று சென்னையில் நேற்று வெளியிட்ட அறிக்கை ஒன்றில் திருகிருஷ்ண சுவாமி கூறியிருக்கிறார்.

ஏற்கனவே முன்னாள் அமைச்சர்களான எஸ். டி. சோமசுந்தரம், கண்ணப்பன், அரங்க நாயகம், முத்துசாமி, குழந்தைவேலு, இராமச்சந்திரன் ஆகியோர் அ.தி.மு.க. விலிருந்து பிரிந்து போட்டிக் குழு அமைத்திருப்பது தெரிந்ததே. (இ-4)

# அடுத்த தேர்தலில் சுதந்திரக்கட்சி தனித்துப் போட்டியிட விரும்புகிறது

## கூட்டணிக் கட்சிகளின் தொந்தரவுகள் தந்த பாடம்

கொழும்பு, ஓக. 25

அடுத்த பொதுத் தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தனித்துப் போட்டியிடக் கூடியதாக நாடு முழுவதிலும் அக்கட்சியின் தளத்தைப் பலப்படுத்தும் படி தமது கட்சியின் நெருங்கிய சகாக்களுக்கு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பணிப்புரை விடுத்திருக்கின்றார்.

கொழும்பு ஆங்கிலத் தினசரி ஒன்று இத்தகவலை வெளியிட்டிருக்கின்றது.

ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி, லங்கா சமசமாஜக் கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி, மற்றும் முஸ்லிம் காங்கிரஸ் ஆகியவற்றுடன் இணைந்து பொது மக்கள் ஐக்கிய முன்னணி என்ற கூட்டணியை அமைத்துப் போட்டியிட்டதன் மூலமே ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அணியால் கடந்த பொதுத் தேர்தலில் ஆட்சியைப் பிடிக்க முடிந்தது.

ஆனால் கூட்டணிக் கட்சிகள் தற்போது கொடுக்கும் தொந்தரவுகளில் சினமுற்றுள்ள ஜனாதிபதி சந்திரிகா அடுத்து வரும் தேர்தல்களில் தனித்துப் போட்டியிட்டு சிக்கல்களைத் தவிர்த்துக் கொள்ள விரும்புவதாகத் தெரிகின்றது.

அதேசமயம் —

ஐக்கிய தேசியக் கட்சியும் எதிர்வரும் தேர்தல்களில் தனித்துப் போட்டியிடவே விரும்புவதாகத் தெரிகின்றது 1994 பொதுத் தேர்தலில் தமது கட்சியுடன் கூட்டணி அமைத்துப் போட்டியிட்ட இ. தொ. கா. பின்னர் கூட்டணியை முறித்துக் கொண்டு அரசுப் பக்கம் சேர்ந்துகொண்டதால் ஏற்பட்ட கசப்பான அனுபவத்தை அடுத்தே, தனித்துப் போட்டியிடும் தீர்மானத்தை ஐ. தே. க. எடுத்திருப்பதாகக் கூறப்படுகிறது.

— இவ்வாறு அந்தப் பத்திரிகை மேலும் தகவல் வெளியிட்டது. (உ)

## ஈழ அகதிகளின்..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கையில் இருந்து தமிழகத்துக்கு மீண்டும் தமிழர்கள் செல்வது குறித்து இந்திய மத்திய அரசுக்கு ஏற்பட்டிருக்கும் விசனத்தை வெளிப்படுத்தி கடந்த 14 ஆம் திகதி டில்லியில் வெளியுறவு அமைச்சு பேச்சாளர் விடுத்த அறிக்கையைப் போல தொடர்ந்தும் அறிக்கைகள் வெளிப்படுத்தப்படும் நிலை உருவாகாமல் அகதிகள் வருகைப் பிரச்சினையை சமாளித்து அதனைக் கட்டுப்படுத்தக் கூடிய மட்டத்துக்கு வைத்திருக்க வேண்டிய அவசியம் குறித்து மத்தாய் இலங்கை அதிகாரிகளுடன் ஆராய்ந்தார்.

மத்தாயுடன் பேசிய இலங்கை அதிகாரிகள் தமிழகத்துக்கு இலங்கைத் தமிழர்கள் அகதிகளாகச் செல்வது குறித்து தாங்கள் நன்கு தெரிந்து வைத்திருப்பதாகவும் —

இதைத்தடுக்க சாத்தியமான சகல நடவடிக்கைகளும் மேற்கொள்வதாகவும் உறுதியளித்தனர். (இ-3)

## ராணுவ...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

கென முதலில் கிராம சேவையாளர் பிரிவு தோறும் இணைப்பாளர் ஒருவரை நியமனம் செய்யுமாறு வடக்கு-கிழக்கு அரச அதிபர்கள் கேட்கப்பட்டுள்ளனர்.

வடக்கு - கிழக்கில் உள்ள தமிழ்ப் பிரதேசங்களின் மாத்திரமன்றி முஸ்லிம் பிரதேசங்களில் இருந்தும் இந்தப் படைக்கு இளைஞர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவர்.

இது தொடர்பான பூர்வாங்க வேலைகள் முதலில் மட்டக்களப்பில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள பிரதேச செயலர்கள் அரச அதிபரால் அழைக்கப்பட்டுள்ளனர் என்றும்—

இப்படையில் சேரவிருப்பம் கொண்ட இளைஞர்களின் விவரங்களை திரட்டித் தருமாறு கிராம சேவையாளர்களுக்கு பணிப்புரை விடுக்குமாறு கேட்கப்பட்டுள்ளதாகவும்— தெரிய வந்தது.

இதற்கான விண்ணப்பப்படிவங்கள் இன்று கிராம சேவையாளர்களிடம் கையளிக்கப்படவிருப்பதாக மட்டக்களப்பு செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்தப் படைக்கு ஆட்களை திரட்டும் பணி சம்பந்தமாக அரச அதிபரோ அல்லது இணைப்பாளர்களோ எந்த வித அதிகாரம் கொண்டவர்களாகவும் இருக்க மாட்டார்கள் என்றும் —

விவரங்களைச் சேகரித்து அனுப்பும் பொறுப்பு மாத்திரமே இவர்களிடம் இருக்கும் என்றும் —

மேலும் தெரிவிக்கப்பட்டது. (உ-8)

## சமய சந்நிதிகளில்

மீசாலை நீலகண்ட வெள்ளை மாவடிப் பிள்ளையார் ஆலய வருடாந்த தேர்த் திருவிழா, நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை காலை நடைபெறவுள்ளது. நாளை திங்கட்கிழமை சப்பறத் திருவிழாவும், புதன்கிழமை தீர்த்தத் திருவிழாவும் நிகழவுள்ளன. (அ)

★ ★ ★

தொண்டமானாறு செல்வச் சந்நிதி முருகன் ஆலய வருடாந்த தேர்த்திருவிழா நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை காலை நடைபெறவுள்ளது. சப்பறத் திருவிழா நாளை திங்கட்கிழமை இடம்பெறும். (அ-173)

★ ★ ★

தொண்டமானாறு செல்வச் சந்நிதி முருகன் ஆலய வருடாந்த மகோற்சவத்தை முன்னிட்டு —

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைபண்பாட்டுப் பேரவை நடத்தும் தெய்வீகக் கலை நிகழ்ச்சிகள் தொடரில் இன்று 25ம் திகதி ஞாயிற்றுக்கிழமை ''வேலும் மயிலும்'' என்ற பொருளில் கரணவாய் மகா வித்தியாலய அதிபர் சைவ சித்தாந்த சொற்பொழிவாற்றுவார். (அ-4)

★ ★ ★

சரசாலை நுணாவில் சிதம்பர விநாயகர் ஆலய மணவாளக்கோல விழா வரும் 27ம் திகதி செவ்வாய்க் கிழமை நடைபெறும்.

காலை 9 மணிக்கு சங்காபிஷேகமும் மாலை 3 மணிக்கு பஞ்சமுகார்ச்சனையும் இடம்பெறும். (அ)

★ ★ ★

யாழ். புனித அடைக்கல மாதா தேவாலய வருடாந்த உற்சவம் இம் மாதம் 30 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி அடுத்த மாதம் 8 ஆம் திகதி திருநாள் திருப்பலியுடன் முடிவடையும். (அ-173)

## முகாம் பொறுப்பதிகாரி சுட்டுக் கொலை

கொழும்பு.ஓக. 25

மொனராகலை மாவட்டத்தில் உள்ள சியம்பலான்டுவ விசேட அதிரடிப்படைமுகாம் பொறுப்பதிகாரி எஸ். பி. தர்மபால சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

இதே முகாமைச் சேர்ந்த அதிரடிப்படைவீரர் ஒருவருடன் ஏற்பட்ட வாய்த்தர்க்கத்தின் போதே அவரால் அவர் சுடப்பட்டார் என்று தெரிவிக்கப்படுகிறது.

உயர் அதிகாரியைச் சுட்ட அதிரடிப்படைவீரர் கைது செய்யப்பட்டுள்ளார். (இ-3)

## இளைஞன் வீடு திரும்பவில்லை

யாழ்ப்பாணம், ஓக. 25

மாடு மேயக் கட்டவென வீட்டிலிருந்து சென்றவர் பத்து நாள்களுக்கு மேலாகியும் இன்னமும் வீடு திரும்பவில்லை என பெற்றோரால் தெரிவிக்கப்படுகிறது.

பண்டத்தரிப்பில் கடந்த 14 ஆம் திகதி இடம்பெற்ற இச்சம்பவத்தில் அவ்விடத்தைச் சேர்ந்த சுப்பிரமணியம் அரிதாஸ் (வயது 18) என்பவரே காணாமற்போனவராவார்

இதுபற்றி செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவுடன் தொடர்பு கொண்ட போதிலும் எதுவித பலனும் கிடைக்கவில்லை என்று பெற்றோர் தெரிவிக்கின்றனர். (இ-15)

## ஏழாலையில் தாக்குதல் சம்பவம்

கொழும்பு, ஓக. 25

ஏழாலையில் கடந்த புதனன்று இரவு 8. 30 மணியளவில், கைவிடப்பட்ட வீடு ஒன்றைப் படையினர் சோதனையிட்ட சமயம் படையினரைநோக்கிப் புலிகள் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர் என்றும்—

படையினர் திருப்பித் தாக்கி அதனை முறியடித்தனர் என்றும் — பாதுகாப்பு அமைச்சு நடவடிக்கைத் தலைமையகம் தெரிவித்தது.

## புலிகளை அனுருத்த...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

போது '' என்ற தலைப்பில் பிரசுரமாகியுள்ள அப்படத்தில் —

சிரித்த முகத்துடன் அப்போதைய லெப்டினன்ட் கேணல் அனுருத்த ரத்வத்தை, தர்மசிறி சேனநாயக்கா, ஸ்ரீ. ல. சு. கவின் வவுனியா அமைப்பாளர் நடராஜன், குமார் பொன்னம்பலம் ஆகியோர் முன்னாள் புலிகள் பிரமுகர் டிலிப் யோகி ( இராணுவச் சீருடையுடன் ), புலிகளின் வவுனியாத் தலைவர் தினேஷ் (அனேகமான ஸ்ரீலங்கா சிப்பாய்கள் உபயோகிக்கும் தானியங்கி வகை ஆயுதத்துடன் ) காட்சி தருகின்றனர் என்று படத்துக்குக் குறிப்பு எழுதப்பட்டுள்ளது. (உ)

மரண அறிவித்தல் 2 ஆம் பக்கத்தில்

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிகேசன் (பிறைவேற்) லிமிடெட்டினரால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அவர்களதுபணிமனையில் 25-08-1996 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.